1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிரிமினல் வழக்கு போடப்பட வில்லை. 1965-வது வருடத்திலிருந்து தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெற்று வருகிறது. தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெறுகிறது என்பதே தவறு தான். தணிக்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டிய தவறுகள் நீக்கப்படவில்லை. தவணை தவறிய கடன் 15% க்கு மீறக்கூடாது என்ற ரிசர்வ் பாங்கி விதியை மீறினார்கள்.

Thanjavur District Co-operative Central Bank

* 75 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that there are charges against the Chairman of the Thanjavur District Central Co-operative Bank ; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம் .

(இ) மேல் நடவடிக்கை எடுக்கப் படுவதற்குக் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே குறைவான தொகை 2 லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்களே, இம் மாதிரி மற்ற வங்கிகளில் ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கையாடல் செய்யப்பட்டு வராமல் இருப்பது சுமார் 2 லட்சம் அல்ல, 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மத்திய வங்கி லிருந்து, கிராம நாணய சங்கத்திற்குக் கொடுத்ததாகக் கணக்கு எழுதப்பட் டிருக்கிறது. அதில் ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இன்னும் 50 ஆயிரம் ரூபாய் பாக்கியிருக் கிறது. இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்காக வங்கிகளின் விதிகள் திருத்தப்பட இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த வங்கியிலே சேர்மன் மீது தான் குற்றச்சாட்டு உள்ளதா ? அல்லது ஊழியர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளதா ? விசாரணை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சேர்மன் மட்டுமல்ல அதற்குப் பொறுப்பு. ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள், இதையொட்டி,

மாணிக்கவாசகம், கண்ணையன், ரிஷபதாஸ், சந்தானராமன், மோசஸ், ராஜ்தாஸ் ஆகியவர்கள். அதிலே இப்பொழுதிருக்கும் விதிகளின்படி அதிலேயிருக்கும் செக்ரட்டரியாக இருப்பவர் மீது குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சூப்பர்வைசரெல்லாம் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள்மீது ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, யாராவது பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களா, யாராவது சஸ்பென்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்களா ? யாராவது இன்னும் கைது செய்யப்படாமல் ஒளிந்து கொண்டிருக்கிறார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கந்தர்வகோட்டை யூனியன் மேனேஜர், சூப்பர்வைசர், அதிலே ஒருவர் சீனியர் சூப்பர்வைசர், ஒருவர் ஜூனியர் சூப்பர்வைசர், இன்னொருவர் மத்திய வங்கியின் பிராஞ்ச் மானேஜர், கைது செய்யப்பட்டது மட்டுமல்லாமல், வேலை நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திருவாரூர் கூட்டுறவு வங்கியின்மீது பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அங்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? இங்கே ஏன் இவ்வளவு துரிதமாக எடுக்க வேண்டும் ? இதில் ஏதேனும் வித்தியாசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, திருவாரூரில் மத்திய வங்கி இல்லை. கூட்டுறவு வங்கிகளில் பல இருக்கின்றன. கூட்டுறவு வங்கிகளில் எட்டு வகை உண்டு. இதில் மத்திய வங்கியும் ஒன்று. திருவாரூரில் இருப்பது அர்பன் பாங்க். அது தன் காலில் நிற்பது. அதற்கு அரசு கடன் உதவியோ, பங்கு உதவியோ செய்யவில்லை. ஆனால் அவைகளையும் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கியிலே தவறு செய்தவர்கள் பற்றிய சில 'ஃபைல்கள்' காணாமல் போனது என்று தெரிகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எந்த பைல் காணாமல் போனது ? இப்படிப்பட்ட புகார்களை ஆதாரமில்லாமல் சொல்வதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது. பைல்கள், அரசின் கைவசமிருக்கும் பைல்களில் எந்த பைலும் காணாமல் போனது என்று சொல்ல முடியாது.

1973 பிப்ரவரி 8]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சரவர்களுக்கு இவ்வளவு கோபம் வரவேண்டிய அவசியம் இல்லை. நான் அரசின் பைல்கள் என்று சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியில் பைல்கள் காணமல்போனது உண்மையா என்று கேட்டேனே தவிர, அரசினுடைய பைல் காணமல் போனதா, காணமல் போகவில்லையா என்பதைப்பற்றிக் கவலையில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : போலீசிலிருந்து இதுவரையில் எந்த பைலும் காணமல் போனதாகத் தகவல் வரவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the rules and regulations of these societies have been revised and revised since last 50 years, but yet the corruption as also mis-appropriation is rampant. May I know from the Hon. Minister if he will take drastic steps to eradicate the fundamental mistakes and prevent such things happening and take measures to rectify them?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the fundamental reasons are analysed and remedial measures are taken. If the hon. Member would wait for one or two weeks, the details of the changes which are being proposed will be known.

திரு. அ. பரந்தாமன் : தலைவரவர்களே, ஐந்தாண்டுகளுக்கு முன்னல் பலர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு இதுபோன்ற தவறுகள் செய்தார்கள் என்பதால் வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. அந்த வழக்குகளைத் தொடர்ந்து நமது அரசு விசாரணை செய்யுமா என்று அறிவதோடு, உதாரணத்திற்கு .....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உதாரணம் சொல்ல வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. அ. பரந்தாமன் : வடார்க்காடு மாவட்டத்தின் தணிகைப்போளூரில் பழம்பெரும் காங்கிரஸ்காரரான சிந்தலநாயுடு என்பவர் ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் மோசடி செய்தார் என்பதற்காக வழக்கு பதிவாகியிருக்கிறதா? அதைப்பற்றித் தொடர்ந்து விசாரணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, ஏறத்தாழ 350 பேர்கள்மீது போலீசார் தொடர்ந்த வழக்குகள் பல நிலைமைகளில், பல கட்டங்களில் இருக்கின்றன. சில விசாரணையில் இருக்கின்றன, சில வழக்குகள் கோர்ட்டிலே குற்றம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றன. சில

வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கின்றன. உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற இந்தக் குறிப்பிட்ட வழக்கைப்பற்றி என்ன நிலைமை என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, இத்தகைய கூட்டுறவு வங்கிகளில் செக்கில் கையெழுத்திடுகின்ற அதிகாரம் தலைவருக்கு இருக்கிறதா அல்லது நிர்வாக அதிகாரிகளுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இன்றைக்கு செக்கிலே கையெழுத்துப் போட்டு பணம் எடுக்கும் அதிகாரங்கள் துணை விதிகளின்படி, பைலாவின்படி தலைவரிடம் இருக்கிறது. தலைவர்கள்தான் சொத்துக்களுக்கு, பணத்திற்குப் பொறுப்பு என்று இருக்கிறது. ஆனால் சில தலைவர்கள் தாங்களாகவே முன்வந்து இந்த அதிகாரத்தை, செக்கிலே கையெழுத்திடும் அதிகாரத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டிருப்பதால் பல குற்றச்சாட்டுகளும் அனாவசியமாக வருகின்றது என்று கருதி செக்கிலே கையெழுத்துப் போடும் அந்த அதிகாரத்தை செயலாளரிடம் கொடுத்துக் திருக்கிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குதுறை பணியாளர்கள்

*** 76. வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருள் வழங்கு துறையில் 1964-ம் ஆண்டு முதல் தற்காலிகமாகப் பணிக்கு நியமிக்கப்பட்டவர்களின் பணி இதுவரை முறைப் படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) உணவுப் பொருள் வழங்கு ஆணையில் உள்ள பதவிகளுக்குப் பணிவிதிகள் எதுவுமில்லை. பணி நிலைமைகள் உணவுத்துறையின் 16—4—1947 நாளிட்ட 449-ம் எண் அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட நிர்வாகக் கட்டளைகளினால் முறைப்படுத்தப்படுகின்றன. இத்துறையில் தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்களின் பணியை முறைப்படுத்துவதென்னும் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் கேள்வி, இதுவரையிலும் அந்த சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே பணியாற்றும் பல சிப்பந்திகள் 8, 9 வருஷங்களாகியும் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா ? அப்படியிருந்தால் அவர்கள் எத்தனைபேர் ?